பழனி தேவஸ்தானத்திலுள்ள "விஞ்ச்"

204 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பழனி தேவஸ்தானத்தில் அமைத்துள்ள "விஞ்ச்" பிரயாணிகளுக்குப் போதவில்லையாதலால் இன்னொரு விஞ்ச் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

Tamil Nadu Electricity Board

* 205 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether Tamil Nadu Electricity Board has entered into contracts with some black-listed firms in Mysore State?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : சென்னையிலுள்ள நிறுவனம் ஒன்றுடன் 1966-ம் ஆண்டு, ஜுலை, அக்டோபர் திங்களிலே "மின் கடத்திகள்" வழங்குவதற்கென தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்த நிறுவனம் மைசூர் மின்சார வாரியத்தால் 1966-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1967-ம் ஆண்டு எப்ரல் 29-ம் நாள் வரை "கரும்பட்டியலில்" சேர்க்கப்பட்ட ஆணை 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ம் தேதியன்று தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடைத்தது. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 29-ம் தேதி அன்று "கரும் பட்டியல்" ஆணை நீக்கப்பட்ட வரையில் பொருள்கள் வழங்கும்படி அந்த நிறுவனத்திற்கு ஆணையெதுவும் அனுப்பப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. தன்னிலை விளக்கம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் கேட்ட துணை வினாவிற்கு விடையளிக்கையில் உறுப்பினரைப்பற்றி அமைச்சர் குறிப்பிட்டது.

பகல் 10-00 **திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தன்னிலை விளக்கம் ஒன்று அளிக்க விரும்புகிறேன். நாகப்பட்டணத்தில் அரிசி சம்பந்தமாக நான் கேள்வி கேட்கும்போது அமைச்சர் அவர்கள், நான் தவறாகப் புரிந்து கொண்டதாகச் சொன்னார்கள். வாஸ்தவத்தில் தஞ்சை மாவட்டம் ஒரு உபரி மாவட்டம் என்றாலும் அங்கு உபரியில்லாத பல இடங்களும் இருக்கின்றன. அங்குள்ள நிர்வாகக் கோளாறு காரணமாக உண்மையாக நாகப்பட்டணம் போன்ற இடங்களிலும் இன்னும் பல இடங்களிலும் பல சந்தர்ப்பங்களில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு நிலை ஏற்படாத நிலையைப் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று சொன்னேனே தவிர தஞ்சை மாவட்டம் ஒட்டுமொத்தமாக உபரி மாவட்டம் அல்ல என்று கருதிச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நாகப்பட்டணம் கோடவுன், நாகப்பட்டணம் மக்களுக்கு அரிசி வழங்கவேண்டுமென்பதற்காக அது தேக்கி வைக்கப்படுகிற இடமல்ல. அங்கு சேகரித்து வைத்து மற்றப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்க கட்டப்பட்ட இடம் என்று சொன்னார்கள். அங்குள்ள தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கட்டப்பட்ட கட்டடம் அல்ல என்று சொன்னார்கள். நீங்கள் விவரம் தெரியாமல் கேட்பதாகச் சொல்லவில்லை. ஆகவே நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளவேண்டாம்.